www.Padasalai.Net www.TrbTnpsc.com

//மின்னஞ்சல்மூலம்//

**பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் ( தொழிற்கல்வி ) செயல்முறைகள், சென்னை -06**

**ந.க.எண்:04632/வி2/இ1/2022 நாள்:17.04.2023**

**பொருள்:** பள்ளிக்கல்வி- 2022-2023 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்களுக்கு தலைமைப் பண்புப் பயிற்சியளித்தல் – சார்பாக.

**பார்வை:**
1. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் அறிவிப்பு
2. சென்னை-6, பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் ( தொழிற்கல்வி ) செயல்முறைகள் ந.க.எண்:04632/வி2/இ1/2022நாள்:13.03.2023

......

பார்வை 1-இல் காணும் **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் அறிவிப்பின்படி தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமைப்பண்புப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, தற்போது 04.05.2023 முதல் 27.05.2023 வரை Batch 40 முதல் 51 வரை மற்றும் Batch 01, 02 ல் வருகை புரியாத தலைமை ஆசிரியர்களுக்கும் இணைப்பு -2 ல் உள்ள அரசு உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ பொறுப்பு தலைமை ஆசிரியர்களுக்கு இணைப்பு-1இல் குறிப்பிடப்பட்டுள்ள மையத்தில் தலைமைப்பண்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் இணைப்பு-3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமையாசிரியர்கள் முதன்மை கருத்தாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சியில் பங்கேற்கும் தலைமை ஆசிரியர்கள் / பொறுப்பு தலைமை ஆசிரியர்கள் பட்டியல் (இணைப்பு -2) மற்றும் முதன்மைக் கருத்தாளர்களின் பட்டியல் (இணைப்பு-3) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் அட்டவணைப்படி பயிற்சியில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமையாசிரியர்களை கீழ்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி பணியிலிருந்து விடுவிக்க முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

1. அரசு உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியர் இல்லாமல் இருந்தாலோ அல்லது தலைமையாசிரியர் 2023 ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெறுவதாக இருந்தாலோ, அப்பள்ளியில் உள்ள பொறுப்பு தலைமையாசிரியர் அல்லது உதவித் தலைமையாசிரியர் பங்கேற்பதை முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி செய்து கொண்டு, அத்தலைமையாசிரியருக்கு மாற்றாக வரும் பொறுப்பு தலைமையாசிரியர் / உதவி தலைமையாசிரியரிடம் அது குறித்து முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்துடன் பயிற்சிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் குறிப்பிட்ட பயிற்சி நாட்களில் மருத்துவ அல்லது வேறு காரணங்களால் குறிப்பிட்ட நாட்களில் வர இயலாமல் இருந்தால் முதன்மைக் கல்வி அலுவலரிடம் தெரிவித்து மாற்றம் செய்து கொள்ள வேண்டும். அவருக்கு மாற்றாக முதன்மைக் கல்வி அலுவலர் வேறு ஒரு தலைமையாசிரியரை முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்துடன் பயிற்சிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பயிற்சியில் பங்கேற்கும் தலைமை ஆசிரியர்கள் கீழ்காணும் நடைமுறைகளை பின்பற்றும் வகையில் உரிய அறிவுரை வழங்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பயிற்சிக்கு வரும் தலைமை ஆசிரியர்கள், பயிற்சி தொடங்குவதற்கு முதல் நாள் மாலை 5 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் தவறாமல் பயிற்சி மையத்தில் பதிவு செய்ய வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் மட்டுமே பயிற்சிக்கான பதிவு மற்றும் அறைகள் ஒதுக்கீடு ஆகியவை செய்யப்படும்.
2. பயணப்படிக்கு தேவையான பயணச்சீட்டுகள் மற்றும் தலைமையாசிரியரின் வங்கி கணக்கு புத்தகத்தின் (Pass Book) முதல் பக்க நகல் ஆகியவற்றை கொண்டு வர வேண்டும்.
3. TNSED School செயலி மற்றும் Google Sheet செயலி ஆகியவற்றை தங்களது கைப்பேசியில் பதிவிறக்கம் செய்திருக்க வேண்டும்.
4. தங்கள் பள்ளியைப் பற்றிய Presentation (PPT) இருந்தால் அதனை கொண்டு வர வேண்டும்.

இப்பயிற்சி சார்பான விவரங்களை பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைத்து தலைமை ஆசிரியர்கள் / பொறுப்பு தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதன்மைக் கருத்தாளர்களுக்கும் தவறாமல் தெரிவிக்க வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மேலும் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக திரு.கார்மேகம், APO ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மதுரை (கைபேசி 9047709066) என்பார் செயல்படுவார் எனவும், அன்னாரை தொடர்பு கொண்டு பயிற்சியில் கலந்து கொள்வதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்த வேண்டும் எனவும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. **பயிற்சி நடைபெறும் நாட்கள்.**
2. **தலைமையாசிரியர்களின் பெயர் பட்டியல்.**
3. **முதன்மைக் கருத்தாளர்களின் பெயர் பட்டியல்**

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

17.4.23

**பெறுநர்:** அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்.

**நகல்**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி . சென்னை – 6 – தக்க நடவடிக்கைக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் , சென்னை – 6 – தக்கநடவடிக்கைக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. முனைவர்.வை.குமார், இணை இயக்குநர்,(பயிற்சி) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –06 (இயக்குநர் வழியாக) தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை மாவட்டம் – பயிற்சி சார்ந்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
5. திரு. கார்மேகம், உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மதுரை – தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com